**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No. 233/2021**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 1 |
| Name (திரு/திருமதி) | : சரவணன் |
| Father's Name/ Husband's Name | : ஜெயராமன் |
| Village & Taluk | : காரை |
| Calling | : விவசாயம் |
| Age | : 80 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.06.2026**

1, 4 எதிரி ஆஜர்.( 2 மற்றும் 3 எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317/ 355 BNSS-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை :**

1. பட்யடில் சாட்சி-2 கஸ்தூரி எனது மனைவி ஆவார். இவ்வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 2016 ம் வருடம் மாலை சுமார் 05.00 மணியளவில் எதிரிகளுடைய இரு சக்கர வாகனத்தை எங்களுக்கு சொந்தமான மாட்டு கொட்டகையில் விட்டு வைத்திருந்தார்கள் அதை நான் எதிரிகளிடம் எடுக்க சொல்லும்போது அவர்கள் எடுக்க முடியாது என்று என்னை தகாத வார்த்தைகளால் திட்டினார்கள். பின்பு அங்கிருந்து நான் எனது வீட்டிற்கு சென்றுவிட்டேன். அதன் பின்னிட்டு எதிரிகள் எங்கள் மீது புகார் அளித்திருந்தனர் அதன் மீதான விசாரணைக்காக அனந்தபுரம் காவல் நிலையம் சென்றிருந்தேன். அங்கு சமாதானம் ஏற்படாததால் நாங்களும் எதிரிகள் மீது புகார் அளித்தோம். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான் அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். **மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1. ஆக குறியீடு செய்யப்படுகிறது**. காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

1. இவ்வழக்கின் எதிரிகள் எனது ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான்.

கடந்த 30.11.2016 ம் தேதி காலை வேலையில் எங்களுக்கு சொந்தமான மாட்டு கொட்டகையில் எ திரி சுரேஷ் என்பவர் அவரது இரு சக்கர வாகனத்தை

நிறுத்தி வைத்திருந்தார் என்றால் சரிதான். அப்போது அதை கேட்க சென்ற என் மனைவியை இவ்வழக்கின் எதிரிகள் தகாத வார்த்தைகளால் திட்டி, மானபங்கம்படுத்தினார்கள் என்றால் சரிதான்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. நானும் எதிரிகளும் வெவ்வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எதிரிகள் பின்தங்கிய சமூகத்தை சேர்ந்தவர்ள் என்றால் சரிதான். கொட்டகையின் சாவி எதிரிகளிடம் இருந்தது என்றாலும், அதனை எனது மகன் உடைத்துவிட்டார் என்றாலும், எனவே எதிரிகள் எங்கள் மீது புகார் அளித்திருந்தனர் என்றாலும் சரியல்ல. அவ்வாறு ஒரு சம்பவம் நடைபெறவில்லை. நான் சொல்வது தவறு என்றாலும், மேற்குறிப்பிட்ட நிகழ்வால் எங்களுக்குள் முன்விரோதம் ஏற்பட்டது என்றாலும் சரியல்ல.

2. 2ம் எதிரி அவருக்கு சொந்தமான இரு சக்கர வாகனத்தை அவர் வீட்டிற்கும் கொட்டகைக்கும் இடையே விட்டுவைத்திருந்தார் என்றால் சரியல்ல. கொட்டகையில் தான் நிறுத்தி வைத்திருந்தார். நானும் எனது மனைவியும் 2 மற்றும் 4 எதிரிகளை தகாத வார்த்தையால் பேசி அவர்களது சமூகத்தை இழிவாக பேசினோம் என்றாலும், அதன் விளைவாக எங்கள் மீது புகார் அளிக்கப்பட்டு வழக்கு தொடுக்கப்பட்டது என்றாலும், நாங்கள் அவ்வாறு பேசவில்லை. நாங்கள் எதிரிகளை தாக்கியதால் தான் அவர்கள் எங்கள் மீது புகார் அளித்தனர் என்றாலும், அதற்காக வேண்டி நான் சுமார் 5 நாட்கள் கழித்து பொய்யான ஒரு புகாரை எதிரிகள் மீது கொடுத்தேன் என்றாலும் சரியல்ல. எதிரிகளிடம் பேசியபோது பொதுமக்கள் இருந்தனர் அவர்களது பெயர் தற்போது நினைவில் இல்லை. எதிரிகள் அளித்த புகாரில் சமாதானம் ஏற்படவில்லை என்பதால் நானும் அவர்கள் மீது பொய்யான ஒரு புகார் அளித்தேன் என்றாலும் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றாலும் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No. 233/2021**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 2 |
| Name (திரு/திருமதி) | : கஸ்தூாி |
| Father's Name/ Husband's Name | : சரவணன் |
| Village & Taluk | : காரை |
| Calling | : விவசாயம் |
| Age | : 55 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.06.2026**

1, 4 எதிரி ஆஜர்.( 2 மற்றும் 3 எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317/ 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை :**

1. அ.சா.1 சரவணன் எனது கணவர் ஆவார். இவ்வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் எங்களுக்கு சொந்தமான கொட்டகையில் மாடு கட்டியிருந்தோம். அந்த கொட்டகையில் நிறுத்தப்பட்டிருந்த 1ம் எதிரிக்கு சொந்தமான வண்டியை எடுக்குமாறு 1ம் எதிரியிடம் எனது கணவர் கூறினார். பின்னர் அதற்கு எதிரிகள் சுரேஷ் மற்றும் மணிகண்டன் ஆகியோர்கள் என்னை ஆபாசமாக பேசினார்கள் அப்போது எனது கணவரும் மகனும் வீட்டில் இல்லாததால் எதிரிகள் எங்கு தாக்கிவிடுவார்களோ என்று பயந்து கொண்டு அங்கிருந்து சென்றுவிட்டேன். அதன் பின்னிட்டு எதிரிகள் எங்கள் மீது புகார் அளித்தனர். எனவே நாங்களும் அவர்கள் மீது புகார் அளித்தோம். காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. சம்பவ இடத்தில் எனது கணவருக்கும் எதிரிகளுக்கும் இடையே எவ்வித சண்டையும் ஏற்படவில்லை என்றால் சரிதான். எனது மகன் கார்த்தி என்பவர் மீது மின் மோட்டார் உடைத்ததாக கூறி 2ம் எதிரி சுரேஷ் என்பவர் புகார் அளித்திருந்தார் என்றால் சரிதான். எதிரிகள் அரசு புறம்போக்கு இடத்தில் வீடு கட்டியுள்ளனர் என்றால் சரிதான். அவர்கள் வீட்டை சுற்றி இருளர் இனத்தை சேர்ந்தவர்களின் குடியிருப்புகள் உள்ளது என்றால் சரிதான். அவர்களது இடத்திற்கு அருகில் நாங்கள் இடத்தை ஆக்கிரமிப்பு செய்திருந்தோம் என்றால் சரியல்ல, எனது மாமனார் காலத்தில் இருந்தே அங்கு மாடுகள் கட்டும் கொட்டகை உள்ளது.

2.    2ம் எதிரி சுரேஷ் என்பவர் அவரது வீட்டிற்கு எதிரே வாகனத்தை நிறுத்தி வைத்திருந்தார் என்றால் சரிதான். ஆனால் அந்த இடத்தை நாங்கள் அதற்கு முன்பில் இருந்தே அனுபவித்து வந்தோம். நானும், எனது கணவரும் சேர்ந்து எதிரிகளை தகாத வார்த்தைகளார் பேசி மற்றும் அவர்களது சமூகத்தை இழிவுபடுத்தினோம் என்றாலும் சரியல்ல. எனவேஎதிரிகள் எங்கள் மீது புகார் அளித்தனர் என்றாலும் அதில் சமாதானம் ஏற்படாத காரணத்தினால் நாங்கள் அவர்கள் மீது பொய் புகார் அளித்தோம் என்றால் சரியல்ல. சம்பவத்தின்போது எனது மகனும் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரிதான். எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றாலும் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No. 233/2021**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 3 |
| Name (திரு/திருமதி) | : கார்த்திகேயன் |
| Father's Name/ Husband's Name | : சரவணன் |
| Village & Taluk | : காரை |
| Calling | : காவலர் |
| Age | : 29 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.06.2026**

1, 4 எதிரி ஆஜர்.( 2 மற்றும் 3 எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317/ 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை :**

1. அ.சா.1 சரவணன் மற்றும் அ.சா.2 கஸ்தூரி எனது பெற்றோர்கள் ஆவார்கள். கடந்த 27.11.2016 ம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் நான் எனது நிலத்திற்கு மாடு கட்டுவதற்காக சென்றிருந்தேன். எனது அப்பா மற்றும் அம்மா ஆகிய இருவரும் கூலி வேலைக்கு சென்றிருந்தார்கள். எங்கள் ஊர் தண்ணீர் டேங்க் சாவி 4 ம் எதிரி வள்ளியிடம் இருந்தது. அதை நான் கேட்கும் போது அவர்கள் என்னிடம் சாவி தரவில்லை. மேலும், நீ கேட்டால் நான் சாவி தர வேண்டுமா என்று கூறி எதிரிகள் தகாத வார்த்தைகளால் திட்டினார்கள். எனவே நான் மோட்டாரை அவர்களது அனுமதியின்றி போட்டுவிட்டு எங்களுக்கு சொந்தமான மாடுகளை நிலத்தில் கட்டிவிட்டு வந்தேன். அதன் பிறகு எதிரிகள் என் மீது காவல் நிலையத்தில் பொய் புகார் அளித்திருந்தனர். காவலர்கள் அழைத்ததன் பேரில் காவல் நிலையத்திற்கு சென்றோம். அதன் பின்னிட்டு அதே மாதம் 30 ம் தேதி எங்களுக்கு சொந்தமான கொட்டகையில் எதிரிகள் அவர்களது இருசக்கர வாகனத்தை நிறுத்தி வைத்திருந்தனர். அதனை எனது தந்தை எடுக்க சொன்னார் அதன் பேரில் அவர்கள் காலையில் எடுத்துவிட்டனர். மீண்டும் அன்று மாலை மாடு கட்ட எனது பெற்றோர்கள் சென்றபோது அங்கு மீண்டும் இரு சக்கர வாகனம் நிறுத்தப்பட்டிருந்தது. அதனை எடுக்க சொல்லியும் எடுக்கவில்லை. மேலும், எதிரிகள் அப்போது எனது பெற்றோரை தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளனர். எனவே அது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் அளித்தோம். காவலர்கள் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. 27ம் தேதி நடந்த சம்பவத்திற்காக எதிரிகள் என் மீது அளித்த புகார் தொடர்பாக சமாதானம் ஆகிவிட்டோம் என்றால் சரிதான். எனது தந்தை வாகனத்தை குறித்து எதிரிகளிடம் கேட்ட விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 27ம் தேதிக்கு பின்னிட்டு மீண்டும் எனது பெற்றோர்கள் 2 மற்றும் 4 எதிரிகளை தகாத வார்த்தைகளால் பேசி அவர்களது சமூகத்தை இழிவுபடுத்தியதால் எனது பெற்றோர் மீது புகார் அளிக்கப்பட்டது என்றால் அவ்வாறு நடக்கவில்லை. மேற்படி புகாரின் மீது சமாதானம் பேசப்பட்டு அது தோல்வி அடைந்த காரணத்தினால் 5 நாட்கள் கழித்து எனது தந்தை எதிரிகள் மீது பொய் புகார் அளித்தார் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.